**வென்னப்புவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வென்னப்புவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினம் ரூபா 854,977 மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1,796,517 ஆன 02 நிலையான சொத்து விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 4,262,025 தொகை கடன்பட்டோர் கணக்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் மூலதன மானிய பெறுவனவு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் புறநெகும செயற்திட்ட நிர்மாணங்களுக்காக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 355,698 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றிருந்த மூலதன மானிய உதவி ரூபா 806,395 மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,546,356 தொகையான பெறுமதி சேர் வரி நடைமுறைச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 07 கணக்கு விடயங்களுக்குரியதாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் அட்டவணைகள் / பயன்பாட்டு புத்தகங்களின் மீதிகளுக்கு இடையே ரூபா 6,607,318 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் 04 இருப்பு கணக்குகளின் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கு இடையே ரூபா 2,575,609 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்குகளுக்கு இடையே ரூபா 16,802,204 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2014 திசெம்பர் மாதம் முதல் மாதாந்த வங்கிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 384,602 ஆன தொங்கல் கணக்கு மற்றும் ரூபா 33,955 தொகை மதிப்பிழந்த காசோலைகள் 2018 ஏப்ரல வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

பெற வேண்டிய கணக்கு மீதிகளில் காணப்படும் விரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படாத ரூபா 151,793,850 ஆன மீதிகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய மீதிகளில் காணப்படும் விரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படாத ரூபா 23,124,936 ஆன மீதிகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 347,895,628 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகளுடனான தொடர்பு | | | பெறுமதி (ரூபா) | இணங்காமை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | (i) | 129(2)(அ)(ஊ) பிரிவுகள் | 174,347,175 | பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்கள், முத்திரைக் கட்டணம் மற்றும் குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | 136 ஆம் பிரிவு | 5,269,952 | சபைக்குரிய குத்தகை ஆதனங்களில் ரூபா 4,846,680 வீதவரி மற்றும் ரூபா 423,272 ஏக்கர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 143 ஆம் பிரிவு | 4,867,000 | சபை அதிகாரப் பிரதேசத்திலான கட்டிடங்கள் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்து வாடகை அறவிடப்பட்டி ருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | | |
| | (i) | 5(3) இலக்க விதி | | வருமானம் சேகரிப்பு தொடர்பாக உள்ளக பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை. |
| | (ii) | 5(7) இலக்க விதி | | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | விதி இலக்கம் 10 | | இலக்கிடப்பட்ட திகதிகளுக்கு முன்னர் இணங்காத வகையில் ஒவ்வொரு செயற்திட்டமும் செயற்படுத்தப்படுவதாக கண்காணிக்கப் படவில்லை. |
| | (iv) | விதி இலக்கம் 10(8) | | சபைக்குச் சொந்தமான 03 சொத்து விடயங்கள் காணாமல் போனமை ஆதனங்கள் தொடர்பான பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (v) | விதி இலக்கம் 33 | வீதவரி கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யும் நபர்கள் தொடர்பான பட்டிலொன்றும் ஆதனங்களை தடைசெய்யும் பிடியாணை ஒவ்வொரு காலாண்டின் போதும் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (vi) | விதி இலக்கம் 61 | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சகல கைத்தொழில்கள், வர்த்தக, வியாபார மற்றும் தொழில்துறைக்குரிய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | விதி இலக்கம் 66 | 1987 இன் 15 பிரதேச சபை சட்டத்தின் 150(4) இன் பிரகாரம் செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (vii) | விதி இலக்கம் 141 | பீ.எஸ். 39 மாதிரியின் பிரகாரம் வைப்பு பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ix) | விதி இலக்கம் 163 | பொழிப்பு வருமானப் பதிவேடு உரிய விதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (x) | விதி இலக்கம் 193 | வருடாந்த பாதீட்டின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் மிகை / பற்றாக்குறை தொடர்பான கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (xi) | இலக்கம் 218 விதி | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.3.7 போதியளவு அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

முறையான அங்கீகாரமின்றி ரூபா 29,429,767 தொகையான நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்குரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 123,568,433 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 137,039,973 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபைக்குச் சொந்தமான 03 வங்கி நடைமுறைக் கணக்குகள் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டதுடன், அக்கணக்குகளில் காணப்படும் ரூபா 1,416,145 தொகை ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 11,991,000 | 13,028,515 | 9,928,182 | 4,866,874 | 12,003,000 | 10,062,260 | 13,271,274 | 4,562,964 |
| (ii) | வாடகை | 42,894,000 | 69,419,346 | 68,234,540 | 4,465,626 | 34,447,000 | 39,184,615 | 39,301,304 | 6,538,577 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 6,696,000 | 7,078,644 | 7,078,644 | - | 6,048,000 | 10,965,470 | 10,965,470 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 213,131,000 | 242,130,373 | 170,998,480 | 170,612,234 | 201,970,000 | 245,749,071 | 191,162,142 | 228,280,375 |

குறிப்பு : சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட வருமானத்தின் அறவீடுகள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 331.7 மில்லியனில் ரூபா 256.2 ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 77 சதவீதத்திற்கு சமமானதாக இருந்தது. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 239 மில்லியனான நிலுவை வருமானத்தில் ஆண்டின் இறுதியில் மேலும் 180 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 13,028,515 ஆல் 43 சதவீதத்திற்கு சமமான ரூபா 5,601,847 மற்றும் முன்னைய ஆண்டின் நிலுவை வருமானங்களிலிருந்து ரூபா 3,439,572 சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 வாடகை

மீளாய்வாண்டிற்காக ரூபா 69,419,346 ஆன பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 98 சமமான ரூபா 68,184,150 சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 33,339,638 மற்றும் முத்திரைக் கட்டணங்களாக 118,608,936 கிடைக்க வேண்டி இருந்தது.

### 2.3.6 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(3) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 326,335 அறவிடப்பட வேண்டியிருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

-----------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் பிரகாரம் உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 04 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-------------------------------------------------

விதிக்கப்பட்டிருந்த உப உறுப்புரைகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை**

-------------------------------------------------

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த அபிவிருத்தித் திட்டத்திற்கமைவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த புதிய வருமான மூலங்களை இனங்காணுதல், ஆதனங்களை மதிப்பிடுதல், வரி விதித்தல், உப உறுப்புரைகளை தயாரித்தல் மற்றும் வருமானங்களை சேகரித்தல் போன்ற வேலைத் திட்டங்களுக்கு வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) செயற்படுத்தாத செயற்பாடுகள்**

---------------------------------------------------

வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 8,415,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 08 விடயங்கள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**(உ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

------------------------------------------------------------------------------------------------------

அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் ரூபா 32,020,000 பல்வேறு வகையான 43 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 4,019,383 செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**(ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) சபையினால் நாளொன்றுக்கு 15 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுவதுடன் அதில் சிறிய அளவு கொம்போஸ்ட் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு எஞ்சிய அனைத்து கழிவுகளும் வெளித்தரப்பினருக்குரிய இமொன்றில் வெளியேற்றப்பட்டிருந்தது.

(ii) கழிவு சேகரிக்கும் இடங்களில் சேகரிக்கப்படும் அபாயகரமான கழிவுப்பொருட்கள், இலக்ரோனிக் கழிவுப்பொருட்கள், பிளாஸ்ரிக் கழிவுகள் என்பவற்றை வெளியேற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 3,975,000 செலவிடப்பட்டிருந்ததுடன் கொம்போஸ்ட் தொகுதியின் செயற்பாடுகளுக்காக போதியளவு ஊழியர் எண்ணிக்கையொன்று ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

ஐக்கிய நாடுகளின் "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030" இன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை. எனினும் வறுமையை கட்டுப்படுத்தல், சுகாதார திட்டங்கள், சுத்தமான நீரினை வழங்குதல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) கொம்போஸ்ட் உர விற்பனைக்காக ரூபா 910,000 இற்கு வேன் வண்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது.

(ஆ) சபையின் பிரதான அலுவலம் மற்றும் உப அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினரின் வருகை வெளியேறல் என்பவற்றை பதிவதற்காக கைவிரலடையாள இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றின் நிர்வாகம் மிகவும் பலவீனமாக இருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா 39,061,531 தொகையான செலுத்த வேண்டிய மீதியொன்று வைப்பு வருமானத்திற்கு எடுக்காமல் செலுத்த வேண்டிய கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) பதவியணியின் சிலரால் லீவு அங்கீகரித்துக் கொள்ளாமல் வெளிநாடு சௌன்றிருந்தனர். மேலும் சாரதியொருவரினால் தமது வெளிநாடு லீவு தொடர்பாக ஒப்பந்தத்தின் பிரகாரம் சேவை புரிய வேண்டிய வருடங்களுக்கு முன்னர் மீண்டும் வெளிநாட்டு சென்றிருந்தார்.

(உ) சபையின் விடுமுறை பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 இரண்டாம் தர பதவிகளில் வெற்றிடங்களும் நிறைவேற்று, ஆரம்ப மற்றும் ஏனைய வகையில் 79 மிகை காணப்பட்டன. மேலும் அமைய அடிப்படையில் 03 ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) சேவையினை விட்டுச்சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்தும் முறையே ரூபா 54,675 மற்றும் ரூபா 443,635 அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 3.4 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா 39,061,531 தொகை செலுத்த வேண்டிய மீதியொன்று வைப்பு வருமானத்திற்கு எடுக்கப்படாமல் பிற்போடப்பட்ட செலுத்த வேண்டிய கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்நாது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பாடமை

சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் காணப்படும் காணிகளின் சீரான உறுதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படாமை

மாகாண கல்வித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 30 பேர்ச்சிற்காக வரி உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

1991 ஆம் ஆண்டின் போது ரூபா 4,595,663 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இலக்கமில்லாத மோட்டர் கிரேடரொன்று கம்மல்பத்துவ உப அலுவலகத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.6 பெறுகைகள்

**பெறுகைகள் திட்டம்**

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டு உட்பட முன்னைய ஆண்டுற்கும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 13 மூலதன விடயங்களுக்குரிய ரூபா 15,278,500 ஆன நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நலன்புரிக்காக மீளாய்வாண்டின் போது 43 செலவின விடயங்களின் கீழ் ரூபா 6,480,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 10 செலவின விடயங்களுக்குரிய ரூபா 37,100,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 09 விடயங்களில் ரூபா 36,970,200 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**4.4. தீர்வு செய்யப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்**

முன்னைய ஆண்டின் போது இனங்காணப்பட்ட பின்வரும் நட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) சபைக்குச் சொந்தமான ரூபா 255,000 ஆன சொத்துக்கள் வெளித்தரப்பினருக்கு இலவசமாக கையளிக்கப்பட்டமை மற்றும் ரூபா 177,100 பெறுமதியான 161 கல்வனைஸ் குழாய்கள் காணாமல் போனதால் சபைக்கு நட்டம் ஏற்பட்டமை.

(ii) பெறவேண்டிய வருமானங்களில் ரூபா 30,756,510 மற்றும் சம்பள மீள்நிரப்பல் ரூபா 28,252,666 ஆன முறையான அங்கீகாரமின்றி பதிவழித்தல்.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | கணக்கேடுகள், பி.ச. அறிக்கை மற்றும் பதிவேடுகளில் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>(ii) பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) இருப்பு | இறுதி இருப்பு சரியாக கணக்குகளுக்கு கொண்டு வரப்படாமை |
| (ஈ) கடன்பட்டோர்/கடன்கொடுத்தோர் | (i) அட்டவணைகள் தயாரிக்கப்படாமை<br>(ii) பட்டோலைகள் தயாரிக்கப்படாமை |
| (உ) ஊழியர் முகாமைத்துவம் | (i) பதவியணியினர் அங்கீகரிக்கப்படாமை<br>(ii) வெற்றிடங்களை நிரப்பாமை |
| (ஊ) வருமான நிர்வாகம் | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் அறவிடப்படாமை |